தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1979 ஏப்ரல் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

உடுகுறியிட்ட வினாக்கள்

ஆர். எஸ். மங்களம் ஒன்றியப் பகுதியில் பாதிக்கப்பட்ட நிலங்கள்.

*குறுகிய கால வினா எண் 46— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

முகவை மாவட்டம், ஆர். எஸ். மங்களம் யூனியனில் கடல் கொந்தளிப்பால் உவர் நிலமாக ஏற்பட்ட 1,116·28 ஏக்கர் நஞ்சை நிலங்களை மீண்டும் விளை நிலமாக மாற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தமிழக அரசும், வெள்ள நிவாரணப் பணிகளை ஆய்வு செய்யும் பொருட்டு வந்திருந்த இந்திய அரசுக் குழுவும் ஆய்வு செய்ததில், இப்பகுதி நிலங்கள் ஏற்கனவே வளமிழந்த நிலங்கள் என்றும் பொதுவாக ஏக்கருக்கு ரூ. 1,000 முதல் ரூ. 2,000 வரை மதிப்புள்ளதென்றும், எனவே மிகவும் நுட்பமான சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்வது அவ்வளவாகப் பயனளிப்பதாகாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், இப்பகுதி மக்கள் மேற்சொன்ன திட்டப் பணிக்காகும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் வகையில்லாதவர்கள், எனவே இப்பகுதி உழவர்கள் தமது வழக்கமான முறைகளை மேற்கொள்வதே நல்லதொரு வழியாகும் எனக் கருதப்படுகிறது. இதன்படி இப்பகுதிகளில் கிடைக்கும் கண்மாய் வண்டல்களை நிலத்திலிடலாம். மேலும் மழைத் தண்ணீரை நிறுத்தி வைத்து குறைந்த செலவில் உப்பினை வடிகட்டி விடலாம். இவ்வழியே சிறந்ததாகும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லக்கூடிய காலத்திலே அந்த உவர் நிலத்திற்கு எந்த உதவியும் கிடையாது என்பதைக் குறிப்பாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால், அதே நேரத்திலே அந்த நிலங்களுக்குப் போடக்கூடிய தீர்வையையாவது தள்ளிக் கொடுக்க முடியுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அதை வருவாய்த் துறை அமைச்சரிடம் கேட்டால் தகுந்த பதிலைச் சொல்வார்கள்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, கொஞ்சநஞ்சமல்ல, 1,116 ஏக்கர். அந்த விவசாயிகளுக்கு ஏதாவது உதவி செய்வார்களா என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசு பரிசீலிக்கும்.

பச்சைத் தேயிலையின் விலை.

*குறுகிய கால வினா எண் 47—

திரு. கே. உச்சி : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தொழிலைப் பாதிக்கும் அளவிற்கு, பச்சைத் தேயிலையின் விலை குறைந்து, விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகும் தேயிலைமீது கிலோவுக்கு ரூ. 5 மத்திய அரசு வரி விதித்ததால், பதப்படுத்தப்பட்ட தேயிலைக்கும் பச்சைத் தேயிலைக்கும் விலை குறைந்தது.

(ஆ) மத்திய அரசு ஏற்றுமதி வரியை தற்போது நீக்கியுள்ளதால் நிலைமை சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் ஏராளமான சிறுதோட்டங்களை வைத்திருக்கக்கூடிய தேயிலைத் தோட்ட முதலாளிகள் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் அந்தத் தேயிலையைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் இல்லை. பெரிய தோட்டங்கள் இருக்கக்கூடிய இடங்களில்தான் தொழிற்சாலைகள் இருக்கின்றன.